# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2032/23 - 2017 අගෝස්තු මස 16 වැනි බදාදා - 2017.08.16

*2032/23 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம்* இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டதும் பீ. வி. 64697 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான கம்பனியொன்றான ஸ்ரீலங்கா இன்சிடியூட் ஒப் நனோடெக்னொலஜி (பிரைவட்) லிமிட்டெட் தொடர்பில், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, இதற்கான II ஆம் அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்டதும், முறையே இதற்கான II ஆம் அட்டவணையின் நிரல் II இல் நேரொத்த பதிவுகளில் அதன் சொற்றொடர்சுருக்கம் தரப்பட்டுள்ளதுமான பட்டங்களை அளிப்பதற்கிட்டுச் செல்கின்றதும், அதன்கண் உயர் கல்வியை மேம்படுத்தும் நோக்கத்திற்குமென, பட்டமளிக்கும் நிறுவனமொன்றாக ஸ்ரீலங்கா இன்சிடியூட் ஒப் நனோடெக்னொலஜி (பிரைவெட்) லிமிட்டெட்டை இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமையவும் இக்கட்டளை மூலமும் ஏற்றங்கீகரிக்கின்றேன் :-

**அட்டவணை I**

நிபந்தனைகள்

(இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஸ்ரீலங்கா இன்சிடியூட் ஒப் நனோடெக்னொலஜி (பிரைவெட்) லிமிட்டெட், இலங்கை கல்வித் தகைமை மட்டநியமம் (SLQF) விதித்துரைக்கப்பட்டவாறான ஆகக்குறைந்த அனுமதித் தகைமைகளுக்கு பின்வருமாறு அமைந்தொழுகுதல் வேண்டும் :-

(i) இயைபான துறையில் SLQF மட்டம் 6 இன் ஓர் இளமாணி கௌரவ/விசேட பட்டம் ; அல்லது

(ii) தொடர்புடைய துறையில் SLQF மட்டம் 6 இன் ஓர் இளமாணி கௌரவ பட்டம் ; அத்துடன் தகைமையளிக்கும் பரீட்சையொன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் ; அல்லது

(iii) இயைபான துறையில் SLQF மட்டம் 7 இன் அல்லது அதற்குமேலான தகைமையொன்று.

**அட்டவணை II**

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| ***பட்டம்*** | ***பட்டத்திற்கான சொற்றொடற் சுருக்கம்*** |
| *நனோ மற்றும் உயர் தொழில்நுட்பவியலில் முதுதத்துவமாணி* | *எம். பில் (நனோ மற்றும் உயர் தொழில்நுட்பவியல்)* |

*லக்ஷ்மன் கிரியெல்ல,*
*உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள்*
*அமைச்சர்.*

*கொழும்பு,*
*2017, ஒகத்து 16.*

*8- 1058*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*